குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஓமலூர்,
முன்னிலை: – திரு.S.சதாம் உசேன், B.A.L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ), ஓமலூர்,

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 09–ஆம் நாள் வியாழக்கிழமை

CMP No: 282/2026
in
Cr.No.353/2026
in
(தாரமங்கலம் காவல்நிலையம்)

A3.ராமன் த/பெ.ஆறுமுகம்

.

.....மனுதாரர்/எதிரி

//எதிர்//

காவல் உதவி ஆய்வாளர்,
தாரமங்கலம் காவல் நிலையம்,
குற்ற எண்.353/2026,
சட்டபிரிவுகள்.U/s.305(a), 331(4) BNS Act 2023.

.... எதிர்மனுதாரர்

இம்மனுவானது 07.07.2026–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சங்கர் அவர்கள் முன்னிலையாகியும், குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

**உத்தரவு**

இம்மனுவானது பிரிவு 480 BNSS ன் கீழ் மனுதாரரை பிணையில் விட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வழக்கின் வரலாறு சுருக்கம்:**

இவ்வழக்கின் வாதியின் பெயர் வேறு என்பவர் கோணகாபாடி என்ற கிராமத்தில் குடியிருந்து கொண்டு வருவதாகவும், தனது அம்மா அலமேலு தம்பி கோகுலுடன் வசித்து வருவதாகவும், தனது அப்பா சில வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டதாகவும்,

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.09 17:06:01 +0530

தானும் தனது தம்பியும் கூலிக்கு பவர் லூம் தறி ஓட்டி வருவதாகவும், தனது அம்மா வீட்டில் இருந்து வருவதாகவும், 21.06.2026 ம் தேதி இரவு தனது அம்மா எங்க வீட்டின் அருகிலுள்ள கோவிலுக்கு தெருக்கூத்து பார்க்க சென்றுவிட்டதாகவும், தானும் தனது தம்பி மூவரும் தறி ஓட்டி சம்பாரிக்கும் பணத்தை எங்கள் வீட்டிலுள்ள இரும்பு பெட்டியில் சேர்த்து வைத்திருந்ததாகவும், அன்று இரவு சுமார் 10.30 மணியளவில் தனது தம்பி வீட்டின் கதவை பூட்டாமல் படுத்து தூங்கி கொண்டு இருந்ததாகவும், தான் அந்த வீட்டின் அருகிலுள்ள இன்னொரு வீட்டிற்கு தூங்க சென்றுவிட்டதாகவும், 22.06.2026 ம் தேதி விடியற்காலை சுமார் 5.00 மணியளவில் தனது தம்பி எழுந்து பார்த்தபோது வீட்டின் கதவு திறந்து இருந்ததாகவும், வீட்டிற்குள் சென்று பார்த்தபோது வீட்டில் இருந்த இரும்பு பெட்டியை காணவில்லை என்றும், உடனே தனது தம்பி தன்னிடம் வந்து வீட்டில் இருந்த இரும்பு பெட்டியை கானோம் நீ எடுத்து எங்கயாவது வச்சிருக்கியா என்று கேட்டதாகவும், அதற்கு தான் இல்லை என்ற சொன்னதாகவும், உடனே தாங்கள் சென்று பார்த்தபோது வீட்டில் வைத்திருந்த இரும்பு பெட்டியை காணவில்லை என்றும், அக்கம் பக்கம் விசாரித்து பார்த்ததிலும் தன் அம்மாவை விசாரித்து பார்த்ததிலும் எந்த தகவலும் இல்லை என்றும், இரும்பு பெட்டியில் பணம் சுமாராக ரூ.3,60,000/- வெள்ளி கொலுசு ஒரு செட்டி, VIVO செல்போன் இரண்டு, Oppo செல்போன் இரண்டு ஆகியவற்றை வைத்து இருந்ததாகவும், யாரே நேற்று இரவு தாங்கள் தூங்கிய பிறகு தாங்கள் பணம் வைத்திருந்த இரும்பு பெட்டியை எங்கள் வீட்டிலிருந்து திருடி சென்றுள்ளதாகவும், தங்கள் வீட்டின் அருகிலுள்ள கோபி, கிருஷ்ணன் ஆகிய இருண்டு பேர் மீது சந்தேகம் இருப்பதாகவும், பிறகு இது குறித்து தாரமங்கலம் காவல்நிலைய குற்றவழக்கு எண்.353/2026, சட்டபிரிவு.305(a),331(4) BNS Act 2023. நாள் 22.06.2026 ன் படி பதிவு செயய்யப்பட்டது.

**<u>மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் பிரிவு.U/s.305(a), 331(4) BNS Act 2023, குற்றத்திற்காக 22.06.2026 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், மனுதாரர் மேற்படி குற்றத்தை செய்யவில்லை என்றும், மேற்படி குற்றம் ஆனது மரண தண்டனையோ அல்லது ஆயுள் கால தண்டனையோ விதிக்க கூடிய குற்றம் இல்லை என்றும், மேலும் மனுதாரர் மதிக்கத்தக்க குடிமகன் என்றும், அவர் மறைந்து கொள்ள மாட்டார் என்றும், நீதிமன்றம் எதிர்பார்க்கும் போதுமான பிணைகளையும், பிணை பத்திரத்தையும், எழுதி

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.09 17:06:05 +0530

தருவதற்கு தயாராக உள்ளார் என்றும், மேலும் எதிரி 18 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரியை பிணையில் விடுவித்தால் நீதிமன்றம் விதிக்கும் எந்தவித நிபந்தனைக்கும் கட்டுப்பட தயாராக உள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பின் பதில்</u>**

எதிர்மனுதாரர் காவல் துறை மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கு புலன் விசாரணை ஆரம்ப நிலையில் இருப்பதால் எதிரியை பிணையில் விட்டால் அவர் மீண்டும் இது போன்ற குற்றச்செயலில் ஈடுபடுவார் என்றும், எதிரியை பிணையில் விட்டால் சாட்சிகளை கலைக்க நேரிடும் என்றும், எதிரி தலைமறைவு ஆகிவிடுவார் என்றும், மேற்கண்ட காரணங்களுக்காக மிகவும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தனர்.

**<u>தீர்வு:</u>**

இரு தரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இவ்வழக்கின் கோப்புகளை பார்க்கும் போது எதிரியானவர் 22.06.2026 அன்று பிரிவு. 305(a), 331(4) BNS Act 2023, குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும், அவர் இதுநாள் வரையிலும் சிறையில் இருக்கிறார் என்று தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் இந்த குற்றத்தை செய்யவில்லை என்றும், இந்த வழக்கு பொய்யாக போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 18 நாட்களாக நீதிமன்ற காவலில் உள்ளார் என்றும், அவரை பிணையில் விட வேண்டும் என்று வாதிட்டனர். இவ்வழக்கு கோப்புகளை கவனமாக பார்க்கும்போது, இது எதிரியின் இரண்டாவது பிணை மனு என்றும், இது எதிரி மீது முன்வழக்கு இல்லை என்றும், மேலும் மனுதாரர்/எதிரியை நீதிமன்ற காவலில் வைப்பது அவசியம் இல்லாதது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

அரசு தரப்பானது மனுதாரரை பிணையில் விடும் பட்சத்தில் அவர் சாட்சிகளை கலைக்கக் கூடும் என்பதற்கும், தலைமறைவாகிவிடுவார் என்பதற்கும் தகுந்த திருப்திக்காரமான காரணங்களை எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும் உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையான **'bail is the rule and Jail is an exception'** என்பதையும் இந்த நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருந்த போதிலும் மனுதாரரின் பங்களிப்பை விசாரணையிலும் இந்த நீதிமன்றத்திலும் உறுதி செய்வதற்காக தகுந்த நிபந்தனைகளுடன் மனுதாரரை பிணையில் விடுவது தகுந்ததாக மற்றும் சரியானதாக

SADHAMHUSAIN S
Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.09 17:06:09 +0530

இந்த நீதிமன்றம் கருதுகிறது. முடிவாக இம்மனுவானது கீழ் கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது:

1.மனுதாரர் சொந்தமாக **ரூ.10,000/-த்திற்கு** பிணைப்பத்திரமும், அதே தொகைக்கு **இரண்டு நபர்கள் பிணை பத்திரமும்** எழுதி தரவேண்டும்.

2. மனுதாரர் ஜாமீன் மனு மற்றும் பிணைபத்திரம் **குற்றவியல் நடைமுறை சட்டம் 2019 விதி 14-ன்** படி இருக்க வேண்டும். மேலும் பிணையதாரர்களின் புகைப்படமானது ஜாமீன் கொடுப்பதற்கு 6 மாதத்திற்குள்ளாக எடுக்கப்பட்ட புகைப்படமாக இருக்க வேண்டும்.

3. எதிரி பிணையில் இருந்து வெளியே வந்த நாள் முதல் தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நிலையம் முன் ஆஜராகி 15 நாட்கள் கையொப்பம் இடவேண்டும்.

4. மனுதாரர் அரசு தரப்பு சாட்சியங்களை கலைக்க கூடாது என்றும்,

5. மனுதாரர் இது போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட கூடாது என்றும்,

6.மனுதாரர் தலைமறைவு ஆகாமல் விசாரணைக்கு அழைக்கும் போது நீதிமன்றத்திலும் எதிர் மனுதாரர் காவல் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூலை 09-ம் வியாழன் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.09 17:06:12 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.